1979 மார்ச் 7] [திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா]

நெசவாளர்களின் ஒரு சாரார் சென்னை கோர்ட் அருகில் அரசியல் சட்டத்தை எரிப்பதற்கான ஏற்பாடு செய்யப்படுவதாக தெரிகிறது. இது சம்பந்தமாக அவர்களை சந்தித்து, நெசவாளர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும் இடையில் சுமூகமாக பிரச்னையை தீர்க்க மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர்களே, மூல கேள்வி கோவை மாவட்ட கைத்தறி நெசவாளர் சங்கத்தின் சார்பில் தொழில் கோர்ட்டு தீர்ப்பை அமுலாக்கக் கோரி நடத்தப்பட்ட போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்வது சம்பந்தமாகத்தான், அதனால் இதை தனிக் கேள்வியாகப் போட்டால் பதில் கொடுக்கிறேன்.

திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மே மாதம், அக்டோபர் மாதங்களில் நடந்த நெசவாளர் போராட்டங்களில் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் அவர்கள் மீது தொடர்ந்து வழக்கு நடந்துக் கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது. மூதறிஞர் இராஜாஜி விழாவிலே முதலமைச்சர் அவர்கள் கைதானவர்கள் எல்லோரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்று அறிவித்தார்கள். ஆனால் அவர்கள் மீதெல்லாம் வழக்குகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அதனால் அவ்வழக்குகளை வாபஸ் வாங்க அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர்களே, அமைதியான முறையிலே போராட்டம் நடத்தியவர்களைத் தான் முதலிலே அரசு விடுதலை செய்திருக்கிறார்கள். வன்முறையிலே இறங்கி போராட்டம் நடத்தியவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

தூத்துக்குடியில் 'கோ-ஆப்டெக்ஸ்' விற்பனை நிலையம்.

*வினா எண் 277—திரு. ந. தனசேகரன்:—மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தூத்துக்குடியில் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் அமைத்ததில் முறைகேடுகள் நடந்துள்ளதாக புகார்கள் ஏதேனும் அரசிற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:

(அ) ஆம்.

(ஆ) புகாரை ஆய்வு செய்ததில் எவ்வித ஒழுங்கீனமும் தூத்துக்குடி விற்பனை நிலையம் அமைப்பதில் ஏற்படவில்லை என தெரிய வருகிறது.

திரு. ந. தனசேகரன்:—பேரவைத் தலைவர் அவர்களே இந்த விற்பனை நிலையம் ஆரம்பிக்கவும் நவீனப்படுத்தவும் ஆகும் செலவு ரூ. 1,30,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக இங்கு கூறப்பட்டது. அங்கே உண்மையிலேயே செலவு செய்யப்பட்ட தொகை 60,000 ரூபாய்தான் என்றும், விற்பனை நிலையத்திற்கான வாடகை 3,000-க்கு பதிலாக 1,500 ரூபாய்தான் என்றும் புகார்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. இந்தப் புகார்களின் மீது விசாரணை நடைபெற்று இருந்தாலும் கூட, மீண்டும் விசாரணை நடத்தி ஆய்வு செய்ய சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:—பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் விற்பனை நிலையத்தின் பரப்பளவு 3,750 சதுர அடியாகும். இதற்கு கோ-ஆப்டெக்ஸ் மாத வாடகையாக ரூபாய் 3,500-ஐ ஒத்துக் கொண்டுள்ளது. ஒரு சதுர அடிக்கு ஒரு ரூபாய் என்ற விகிதத்தில் இப்பொழுது வாடகை எங்கும்—அதுவும் தூத்துக்குடி போன்ற தொழில் முன்னேற்ற இடங்களில் கொடுக்கப்படுகிறது. மேற்படி விற்பனை நிலையம் அலங்கரிப்பதற்காகவும், நவீனப்படுத்தப் படுவதற்காகவும், ரூ. 1,02,845 மதிப்பீடு செய்து, ரூபாய் 1,00,263 செலவிடப்பட்டுள்ளது. ரூபாய் 2,582 குறைவாகவே செலவு செய்யப்பட்டுள்ளது. இப்படி நிலையத்தை அலங்கரித்தல், நவீன்படுத்தல் மூலமாக இவ்விற்பனை நிலையத்தில் ரூபாய் 25 லட்சம் அளவிற்கு மாதாந்திர விற்பனை ஆகும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது என்று தனி அலுவலர் தெரிவித்துள்ளார். ஆகையால் விற்பனை நிலையத்தை நவீனப்படுத்துதல் மற்றும், அலங்கரிப்பதற்காக செலவிட்ட தொகை வரும் மூன்று ஆண்டுகளில் ஈடுகட்டிவிடலாம் என்ற நிலைமையும் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*)உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)